

# வானம் சிவக்கிறது

புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
21 SEP 70
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VANAM SIVAKKIRATHU

# வானம்

# சிவக்கிறது!

IRatnathurai

புதுவை இரத்தினதுரை

280588

V. JAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

280588

சுதாஜினி வெளியீடு
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாஜினி வெளியீடு: 1

முதற் பதிப்பு:- அக்டோபர் 1970.

விலை ரூபா: 1-50.

# Vanam Sivakkirathu!

(A Collection of Poems)

*Author:-*

PUTHUVAI RATNATHURAI

*Publishers:-*

SUTHAGINI PUBLICATIONS
Thirunelvely East,
Jaffna, (Ceylon)

First Edition: 6th October, 1970.

அச்சுப்பதிவு: ஸ்ரீ ஜெயா அச்சகம், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

ஊன்றி நான் உலகைக்கற்று
உழைப்பவர் அணியில் நிற்க
ஈன்றெடுத் தென்னை யிந்த
இனிய பாநூலைச் செய்யத்
தூண்டிய **தாய்க்கும்** பக்கத்
துணை செயும் **தந்தை** தற்கும்
ஆன்ற இந் நன்றிக்காக...
அன்பொடு சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் பிரபல கவிஞரும்
தலைசிறந்த விமர்சகருமான
கவிஞர் இ. முருகையன் B. A. B. Sc. அவர்களின்

# முன்னுரை

ஒரு நாவலாசிரியனின் தலைசிறந்த படைப்பு, அவனது சுயசரிதையைப் பெரிதும் தழுவிச் செல்லும் கதையாகவே காணப்படுகிறது என்பர். இதில் ஓரளவு உண்மை உண்டு சாள்ஸ் டிக்கின்சின் ''ஒலிவர் ருவிஸ்ற்'' தொடக்கம், கே. ஏ. அப்பாஸ் அவர்களின் ''இன்கிலாப்'' வரை இப்பண்பினைப் பல கலைஞர்களிடம் நாம் காண்கிறோம். இது ஏன் என்று சிந்தித்துப் பார்ப்போமானால் நமக்கு ஓர் உண்மை புலப்படும்.

நேரடி அனுபவத்திலிருந்து ஊற்றெடுக்கும் எழுத்துகளே தலை சிறந்து விளங்கும் தகுதியைப் பெறுகின்றன. இந்த வகையிலே பார்க்கும்போது, ஒருவன் தன்னையும், தன் நண்பர்களையும், சுற்றத்தாரையும் பற்றியே மிக நன்கு அறிந்திருக்கிறான்; உணர்ந்திருக்கிறான். எழுத்தாளனும் அப்படித்தான். அதனாலே தான், தனக்கு மிகவும் பழக்கப்பட்ட சூழல்களைச் சித்திரிக்கும் படைப்புகளை இதயநேர்மையுடன் அமைத்துக் காட்ட அவனால் இயல்கிறது. சுயசரிதைச் சாயல் தழுவிய எழுத்துகள் மேம்படுவதற்கும் இதுவே காரணம் எனலாம்.

இவ்வாறு நோக்கும்போது, பல கதைகளில் எழுத்தாளனே கதாநாயகனாக, அல்லது ஒரு பாத்திரமாக ஏன் அமைகிறான் என்ற இரகசியம் நன்கு விளங்கும். பாரதிதாசனின் ''புரட்சிக்கவி'' யின் கதாநாயகன் ஒரு கவிஞனாக இருப்பதும், அகிலனின் பாவை விளக்கில், தணிகாசலம் எழுத்தாளனாக இருப்பதும் இதே காரணத்தை ஒட்டித் தான்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இவ்வாருக, சில கவிஞர்கள் பாத்திரங்களாக மாறி மறைந்து நின்று பேசாமல், நேரடியாகவே வாசகனை நோக்கிப் பேசும் ஒரு நிலையையும் நாம் காண்கிரும். பாரதியார் தமது சுயசரிதையில் மட்டுமன்றி, பராசக்தியை நோக்கிப் பாடிய பாடல்களிலும், வேறும் பல பாடல் களிலும் தமது சொந்த மனக்கிடக்கையை நேரடியாகவே எடுத்துப் பேசுகிருர்.

சொந்த மனக்கிடக்கைகளையும், சொந்தச் சூழலையும் எடுத்துப் பேசும் கலைஞர்கள், தாம் ஈடுபடும் கலைத் துறையைப் பிரதான பொருளாக அமைத்துக் கலை படைப்பதும் உண்டு. தென்னகத்துக் கவிஞர் கலைவாணன் தமது கவிதைகள் பலவற்றில், கவிதைக்கலை பற்றியும் கவிஞன் திறம்பற்றியும் பாடியுள்ளார். நம் நாட்டவரான ''மஹாகவி''யும், கவிஞனைப்பற்றியும், கவிதையைப்பற்றி யும் பல கவிதைகளைப் புனைந்துள்ளார். இந்த நூலின் ஆசிரியராகிய புதுவை இரத்தினதுரை அவர்களும், தாம் என்ன குறிக்கோளுடன் கவிதை எழுதுகிருர் என்பதை எடுத்துரைக்கும் பல கவிதைகளை நமக்குத் தந்துள்ளார். புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கும் எவருக்கும் இந்த உண்மை புலப்படாமற் போகாது. இது பற்றியே

'' அகத்தியன் தமிழ் வளர்த்தான்
அவன் மகன் வளர்த்தான் என்று
புசத்திடும் புலவர் ''

கூட்டத்தைக் கண்டு பொங்கும் நமது கவிஞர்,

'' ஆற்றையும், அருவி தென்றல்
அனைத்தையும் பார்த்துச் சும்மா
பீற்றிடும் கவிஞன் அல்லேன் ''

என்று பேசுகிருர். அது மட்டுமன்று.

'' வேலைகள் செய்யும் போது
விழுந்திடும் வியர்வை, ஓர் நாள்
மூளுமே பெரு நெருப்பாய் ''

என்ற அவரது முழுமையான நம்பிக்கையையும் நாம் தெளிவாகக் கண்டுகொள்ளுகிருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞன் எவனும், தான் ஈடுபட்டுள்ள கலைத்துறை மீது பெருமதிப்புப் பூண்டவனாகவே இருப்பான். இந்த மதிப்பினாலும், பற்றினாலும் அவனுடைய இதயத்துடன் மிக நெருங்கிய ஒரு பொருளாக அவன் மேற்கொண்டுள்ள கலைத்துறையும் மாறிவிடுகிறது கவிதைத்துறையினையே பொருளாக்கி எழுந்துள்ள கவிதைகளுட் சில மேட்டிமை பெற்று மிளிர்வதற்கு இதுவே காரணம் போலும்.

எனினும் மேற்படி கூற்று உண்மையான உயர் கலைகளுக்கே முற்றிலும் பொருந்துவதாகும். மற்றை யோர்களைப் பொறுத்தவரையில், கவிதைக்கலை பற்றி எழுதினாலும்கூட, கவிதைகள் தரங்குன்றியனவாகப் போய் விடுவதைத் தவிர்த்தல் இயலாது இலக்கிய உலகம் இதனை உணருதல் நலம்.

புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் பலவற்றில் உயர்கலைப்படைப்புக்குரிய பண்புகள் பல ஆங்காங்கே பளிச்சிடுவதை நான் காண்கிறேன். இந்நூலிலுள்ள கவிதைகள் அவரது திறமையின் முழுமையையும், இன்று அவர் எய்தியுள்ள தரச்சிறப்பின் சகல முகங்களையும் காட்ட மாட்டாது என்பது உண்மையே. எனினும், அறிவறிந்த வாசகர்களும், நுணுகி நோக்கும் விமர்சகர்களும் இரத்தினதுரையின் கலையுலகப் பிரவேசம் நல்ல சில அறிகுறிகளையும் உடன் கொண்டு நுழைகிறது என்ற உண்மையை உணர்வார்கள்.

இலட்சிய வீறு படைத்த இவ்விளைஞர் காதற் பாட்டுகள் சிலவற்றையும் எழுதியிருக்கிறார்.

''புது நகையை, பூவிரியும் சோலைக் காற்றை
புனலருவி தரும் சுகத்தை, புலரும் வேளை
மதுவருந்தும் வண்டினத்தின் கீதம் தன்னை
மாங்குயிலின் இசையோடு மழலைப் பேச்சை
இது வரைக்கும் நான் வெறுத்ததில்லை; இன்றோ
இவையெல்லாம் வேம்பாகி விட்டதன்பே''

என்று அவர் பாடும்போது, கிழடு தட்டாத உள்ளம் உடைய எவரும் ஒரு கணம் அச்சொல்லொழுக்கின் வசமாகி விடுவர். இதில் ஐயம் இல்லை.

161/30, புதுக்கடைத் தோட்டம், இ முருகையன்
கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சிந்தனுவாதியும்
முற்போக்கு இலக்கியத்துடன் தொடர்புடையவருமான
திரு. மு. கார்த்திகேசன் M. A. அவர்களின்

## மதிப்புரை

''கொட்டாவி விட்டதெல்லாம்
கூறு தமிழ்ப்பாட்டாச்சு
முட்டாளே! இன்னுமாபாட்டு? ''

இதைப் பாடியவன் புதுமைப்பித்தனுகும். கொட்டாவி எந்த நோக்கோடும் வெளியாவதில்லே. அதேபோல நிலேயான நோக்கின்றி, கருத்தின்றி எழுதப்படும் பாட்டுக் களேத்தான் புதுமைப்பித்தன் இப்படி நையாண்டி செய் திருக்கிருன். ஆனுலும் இந்தச் சூட்டுக்குப் பின்னும் கொட்டாவி ரகத்தில் பாட்டுக்கள் எழுதிக் குவிக்கப்பட்டு வருவது இலக்கிய உலகிற்கு மிகவும் துர் அதிஷ்டமே ஆனுல் இந்த இளம் கவிஞனின் பாட்டுக்கள் இந்த ரகத்திலிருந்து விடுபட்டு நிற்பதை எவராலும் உணர முடியும்.

சமூக சீர்கேட்டைக் குத்திக் காட்டி, அச் சீர்கேட்டை அழிப்பதற்கு சமூக அமைப்பையே மாற்ற வழி கூறி, அதனே மாற்றும் சக்திகளுக்கு வீச்சும் வேக்கும் வைராக் கியமும் அளிப்பதே இலக்கியத்தின் இலக்கணமாகக் கொண்டால், இந்தக் கவிதைத் தொகுப்பு இவ் விலக் கணத்திற்கு உட்பட்டதேயென்று பெருமையுடன்கூறலாம்

பயம் என்பது ஒரு கொடுநோய். அது ஒருவனிடம் ஒட்டிக்கொண்டால், அது அவனுக்கும் மற்றவர்களுக்கும் கெடுதியே விளேவிக்கும். உலகிற்கெல்லாம் உபதேசிக்கும் எழுத்தாளனுக்கு பயம் என்பது பிடித்துவிட்டாலோ, அது அவனே அபுஞ்சகமாக்கி, நீதிக்கும் அநீதிக்கும் சமரசங்கண்டு, அதில் அவனே சங்கமமாக்கிச் சமைத்து விடும். இப்படிச் சங்கமமாகிப எழுத்தாளர்கள் சமூகத் தின் மேல் படர்ந்த குருவிச்சையாவர். இதற்கு விதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்காகி, நெஞ்சுரத்தோடும் துணிவோடும் சரியெனப் பட்டதை தனது கவிதைமூலம் ஒழிவுமறைவின்றி எடுத்துரைத்திருக்கும் இவ் இளைஞனின் துணிவை நினைக்க நெஞ்சம் பூரிக்கிறது.

''இலக்கண வரம்புக் குள்ளே
இருந்து நான் கவிதை பாடும்
உலக்கையன் அல்லேன் சும்மா
உளறிட மாட்டேனென்றால்
துலங்கிடும் புரட்சி ஓர் நாள்
துவங்கிடுமப்போ பாக்கள்
வலக்கையாய் நின்று வாழ்த்தி
வழிவிடும் ஏழைக்காக''

இப்படி ஒரு பாட்டொன்றைப் பாடி, துணிச்சலுக்கான இலக்கணத்தையே அடைந்துவிட்டார் இந்த இளங் கவிஞன்.

''கருத்துக்கு மொழிசேவகஞ் செய்வதா? அல்லது மொழிக்குக் கருத்துச் சேவகஞ் செய்வதா?'' என்ற கேள்விக்கு எழுத்தாளர்கள் பலரே இன்னும் முடிவுகாண இயலாது நிற்கின்றனர். இக் கவிதைத் தொகுதியை நன்கு படித்தால் இதற்கான முடிவை இலகுவில் காணலாம் சமீபத்தில் நம்மை விட்டுப்பிரிந்த கவிஞன் பசுபதி அவர்களின் நூலொன்றுக்கு அணிந்துரை வழங்கிய தான் தோன்றிக் கவிராயர் என்பவர்.

''சிந்தையால் வாக்கால் செம்மைச்
செய்கையால் புரட்சி உய்க்க
செந்தமிழ் செங்கொடிக்குச்
சேவகஞ் செய்ய வைக்க
வந்த மா மனிதனை
பசுபதிக் கவிஞன் காயம்
வெந்தழல் உண்டும் வாழும்
வித்தகன் உயிர் இப்பா நூல்''

என்ற ஒரு பாட்டினை யாத்ததன் மூலம் எது எதற்காகச் சேவகஞ் செய்யவேண்டும் என்பதனையும் எதற்காகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும் என்பதனையும், கவிஞன் பசுபதி எப்படிச் சேவகஞ் செய்யவைத்தார் என்பதனையும் சுட்டிக்காட்டிய கூற்று இந்த இளங் கவிஞனின் கவிதைகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

''மலையினைச் சாடவல்ல
மாபெரும் உழைப்பாளர்கள்
அலையினை எதிர்த்து நீந்தும்
ஆயிரம் இளஞ் சிங்கங்கள்
விலையிலா மாணிககங்கள்
வித்தகர் புலமை மிக்கோர்
நிலைபெறு கூட்டமைத்தே
இதற் கொரு முடிவு காண்போம்.''

இது கவிஞன் பசுபதியின் கவிதைகளில் ஒன்றாகும். கொடுமைகளுக்கு முடிவுகாண எடுக்கப்பட்ட சபதமாகும்

''விதைத்தவ னறுத்தல் நீதி
வீதியிற் சும்மா வாயால்
அளப்பவன் தலைமை யேற்கும்
அழிநிலை போக்கி யிங்கு
உழைப்பவன் கொடிகள் தூக்கி
உரிமையைக் கேட்டாலங்கு
முளைத்திடும் புரட்சி தன்னில்
முடியுமே சுரண்டல் ஆட்சி''

இது இந்தக் கவிஞனின் கருத்தாகும். பசுபதியின் சபதம் இந்தக் கவிஞனால் ஏற்று வளர்க்கப்படுவதையும் காண முடிகிறது ஒரே உணர்வு, ஒரே நோக்கம், ஒரே முடிவு தெரியக்காண்கிறோம். காலம் எப்போதாவது பின் நோக்கி ஓடுவதில்லை என்பதும். இலக்கியமும் விதிவிலக்கல்ல என்பதையும் உணர்கிறோம்.

மாவிட்டபுரம் தொட்டு வியட்னும் வரை புரட்சிப் பார்வைகொண்ட இக் கவிஞனின் பாக்களில் போராட்டம் என்ற பேரொலியை கேட்கின்றோம். இதுவே சங்கநாதம். மக்கள் போராட்டத்தில் பிறந்த இவரின் புலமை கால கதியில் தாண்டமும் ஆடும், ஆயுதம் ஏந்தி.

யாழ்/இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

மு. கார்த்திகேசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை...

இருபத்திரண்டு வயதை எட்டிப் பிடிக்க எத்தனிக்கும் நான், எனது பதினாறும் வயதில் சுதந்திரனில் எழுதிய கவிதை யொன்றுடன் எழுத்துலகில் பிரவேசித்ததாக ஞாபகம். அன்று தொட்டு இன்றுவரை பல புனை பெயர்களுடன் அவ்வப்போது பல பத்திரிகைகளிலும் கவிதைகள் எழுதிவருகிறேன். இவற்றை யெல்லாம் ஆரம்பத்திலிருந்தே அவதானித்த இலக்கியவாதிகள் சிலரும் நான் சார்ந்த இயக்கவாதிகள் சிலரும் வெளிவந்த கவிதைகளில் சிலவற்றையாவது தொகுத்துப் புத்தகமாகப் போடலாமே என்று சொல்லத் தொடங்கி, சிலர் பலராகித் தொல்லை நருமளவுக்கு வளர்ந்தபின் உங்கள் கைகளில் வானம் சிவந்திருக்கிறது.

ஆரம்பத்திலே ஆழமான சமுதாயப்பார்வை ஏதுமற்ற நிலையில். உண்மையான இலக்கியத்தை இனம் கண்டு கொள்ளாத நிலையில். வெறும் வானத்தையும், வடிவழகிகளையும் பற்றி நான் பாடிய கவிதைகளை இன்று நானே பார்க்கும்போது அடக்கமுடியாத சிரிப்புத்தான் வருகிறது. இது என் வளர்ச்சியா? ஆமாம் அப்படித்தான் நான் கருதுகிறேன். கலையும் இலக்கியமும் மக்களுக்குத்தானென்ற கோட்பாட்டுக்குள் என்னை என்று திணித்துக் கொண்டேனே, அன்று தொட்டு அந்த வேலியைத்தாண்டி முன்போல் அவதையிதைப் பாடுவதற்கு இனிமேலும் என் கவிதைகளுக்கு தெம்பிருக்குமென்று நான் நினைக்கவில்லை.

எனது ஆரம்பகாலத்துக் கவிதைகளை ஆகா அற்புதமென்ற இலக்கியப் பெரியவர்கள் சிலர் இத் தொகுதியிலுள்ள பல கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தபோது ''வெறும் பிரசாரப் பீற்றல்கள்'' எனத் திருவாய்மலர்ந்தருளியதை நான் மறக்கவில்லை. அதற்காக நான் எனது இலக்கியப் பாதையை மாற்றிக்கொள்ளவுமில்லை. ஈழத்துக் கவிஞர்களிடையே அண்ணர் முருகையனது கவிதைகளில் எனக்கு அலாதியான பிரியம். கவியரங்குகளில் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை சொல்லும் பாணியே தனித்துவமானது: அப்படியான, பிரபலமிக்க, எனக்கு முன்னோடியான முருகையனது முன்னுரை எனது தொகுதிக்கு கிடைத்திருப்பதில் உண்மையிலே எனக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி. அவருக்கு தனியாகவே நன்றி சொல்லக் கடமைப்பட்டவன் நான். சிறந்த சிந்தனுவாதியும், முற்போக்கு இலக்கியத்தில் ஈடுபாடுடையவருமான திரு. மு. கார்த்திகேசனது மதிப்புரை இத்தொகுதிக்குக் கிடைத்தமை எனது பெரும்பேறே. அதற்காக அவருக்கு என்றென்றும் நன்றியுடையவனுவேன்.

எனது இலக்கியப் பயணம் இடையிடையே தடைபடும் நிலையேற்பட்ட போதெல்லாம் ஆக்கமும், ஊக்கமும் தந்தவர்கள் பலரில் சிறந்த சிற்பக்கலைஞரும், எனது சிறியதந்தையுமான திரு. செ. கந்தசாமி அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவருக்கு நன்றி சொன்னால் மட்டும் போதுமா?.. இல்லை... மற்றும் எனது கவிதைகள் தொகுதியாக வெளிவர பலதுறையிலும் ஆலோசனை நல்கிய மைத்துனர்கள் திரு. ஐ. குணசிங்கம், திரு. ஐ. இராசதுரை முதலியோருக்கும்; சிறந்தமுறையிலும், கூடியவிரைவிலும் அட்டைப் படத்தை வரைந்துதவிய எனது மற்றுமொரு மைத்துனன் திரு. இ. கனகராசாவுக்கும் என்னால் என்றுமே மறக்கமுடியாத நண்பர்களானதிரு. வி. சுந்தரலிங்கம் திரு. இ. இராசையா, திரு. மா. தியாகராசா, திரு. பொ. தங்கராசா முதலியோருக்கும், இவ்வளவு அழகாக அச்சிட்டுதவிய சாவகச்சேரி ஸ்ரீ ஜெயா அச்சகத்தாருக்கும் தனித்தனியே நன்றி சொல்லுகிறேன்.

இத்தொகுதி எனது வளர்ச்சியின் இறுதியல்ல,.. ஆரம்பமேதான். இப்போதுதான் வானம் சிவந்திருக்கிறது பகலெனும் ஒரு நாள் பொழுது இனிமேற்தான்.... அப்படித்தான் நான் கருதுகிறேன். நீங்கள்... வாசித்த பின் அறிவியுங்கள்.

இங்ஙனம்

புத்தூர் கிழக்கு, அன்பன்

புத்தூர். புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | என்னை வாழ்த்து | 13 |
| 2 | நான் | 15 |
| 3 | உண்மைக் கவிதைகள் | 18 |
| 4 | மாற்றுப் பாடு | 20 |
| 5 | புரட்சி யோங்கும் | 22 |
| 6 | ஆளும் உரிமைகள் யாரிடம் | 25 |
| 7 | வாழ்க்கை நடத்திடப் போரே | 26 |
| 8 | மக்களாட்சி காணவே | 27 |
| 9 | விடிவை நோக்கி .... | 29 |
| 10 | தொடங்கவேண்டும் | 31 |
| 11 | சுடலையிற் காண்பீர் | 33 |
| 12 | யன்னலைப் பூட்டு | 35 |
| 13 | மாவலியே வடக்கே போனல் | 37 |
| 14 | இன்பம் அளிப்பதற்கே | 41 |
| 15 | காதலிக்கு ஓர் கடிதம் | 43 |
| 16 | தலைச் செருக்கும் தலை குனிவும் | 45 |
| 17 | குரல் மாற்றிக் கூவு | 46 |
| 18 | நெடுவழியே நடக்கின்றோம் | 47 |
| 19 | வீரம் விளைநிலம் வியட்னும் | 49 |
| 20 | குருவாய் எமக்குதவினன் | 52 |
| 21 | ஆலயவேலி அகற்றிடுவோம் | 54 |
| 22 | நெஞ்சத்தே நிறைந்த அண்ணு | 55 |
| 23 | மானுடம் வென்றதம்மா | 58 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை வாழ்த்து

நன்னர் செந்தமிழால் நாளோர்
நயக்கவி படைக்கும் வேளை
சின்னவன் திகைப்பே, னேதும்
சிறுபிழை விடுவே னப்போ
அன்னையே! தமிழே! வந்தென்
அகமிருந் தருளி, யுந்தன்
கண்ணெறிந்திட்டாற் போதும்
கவிதையிற் கள்ளே யூறும்

நாத்தடிப் புடையேன், மிக்க
நறுங்கவி பாடு மாற்றல்
பூத்தவனில்லேன், வேறு
பிறமொழி யறிவில்லாதேன்
வேர்த்திடக் கவிதை தந்தேன்
ஏனெனிற் பாவிற்குற்றம்
கூத்திடு மதிகமாகக்;
குழந்தை நான், பொறுமை கொள்வாய்.

குறு முனி வளர்த்த தென்பார்
கூடலில் வளர்ந்த தென்பார்
நறுங் கனிச் சுவைதானென்பார்
நானிவை யறிய மாட்டாச்
சிறுவனே யம்மா. எந்தன்
சிந்தையிற் புகுந்து, ஏதும்
மறுமொழி தாவேன்... தந்தால்...
மதுரமாய்க் கவிதை யீவேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவிலே... பசியால் வாடும்
திக்கற்ற கூட்டத்துள்ளே
ஒருவனாய் நின்று, அன்னார்
உணர்ச்சிகள் ஊன்றித் தேர்ந்து
கவிதைகள் சொல்ல வந்துன்
கழலடி போற்று மிந்தச்
சிறுவனை வாழ்த்து... பின்னர்
சீறிடும் கவிதை வெள்ளம்.

அகத்தியன் தமிழ் வளர்த்தான்
அவன் மகன் வளர்த்தானென்று
புசத்திடும் புலவர் கூட்டம்
புலம்புதல் கேட்டுப், பாடற்
கசத்திலே ... வாடும் தாயே !
கவிதைகள் பாடலாக...
இசைத்திடும் கருவியல்ல...
இதையுணர், என்னை வாழ்த்து.

✿

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்

ஆற்றையும், அருவி, தென்றல்
அனைத்தையும் பார்த்துச், சும்மா;
பீற்றிடும் கவிஞனல்லேன்
பிறந்திடும் புதுமை கண்டு
ஏற்றிடும் எனது பாக்கள்
என்னிலை தவறேயென்றால்
காற்றையும் வேண்டே, னல்
கவிதையை நிறுத்த மாட்டேன்

பகலிர வென்று பாரேன்
பாடிடும் கவிதை கட்குப்
புகழ்வர வேண்டு மென்று
புலம்பிட மாட்டேன். வேற்றார்
இகழ்ந்திடில் உயிர் போனாலும்
இருந்திட மாட்டே, னெந்தன்
வளமுயிர்வாழ்வு எல்லாம்
வடித்திடும் கவிதை காணீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினி கிடப்பே, ஞுல் ...
பாடிடும் கவிதை தன்னை
விட்டிட மாட்டே னென்ஞல்...
விளைந்திடும் புரட்சி கண்டு
மட்டிலா மகிழ்ச்சி கொள்வேன்
மாதரு மெனது பாட்டைத்
தொட்டிலிற் தங்கள் பிள்ளை
தூங்கிட யிசைப்பார் கேட்பேன்.

இலக்கண வரம்புக் குள்ளே
இருந்து நான் கவிதை பாடும்
உலக்கைய னல்லேன், சும்மா
உளறிட மாட்டே னென்ஞல்
துலக்கிடும் புரட்சி யோர் நாள்
துவங்கிடு மப்போ பாக்கள்
வலக் கையாய் நின்று வாழ்த்தி
வழிவிடும் ஏழைக்காக.

வேலைகள் செய்யும் போது
விழுந்திடும் வியர்வை, யோர் நாள்
மூழுமே பெரு நெருப்பாய்
வியப்பிலை யந்தக் காலம்
நாளையே வேண்டுமென்று
நான் கவி படைப் பேனன்றி
நாலு பேர் கைகள் தட்டி
நகைத்திடக் கவிதை பாடேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லறி வாளரென்று
பட்டங்கள் பெற்றுச் சும்மா
செல்லரிக்காது ஏட்டைத்
துடைத்தபின் கவிஞரென்று
சில்லறை சிலபேர் வந்து
சீறுமூர், நாளையெந்தன்
கல்லறை பேசுமப்போ
காணுவா ரெந்தன் மாட்சி.

காப்பெனக் கவிதை யொன்றைக்
கடவுளின் மேலே காட்டி
ஏய்திடும் பழமை யெண்ணம்
எனக்கிலை யுறுதி சொல்வேன்
சாற்றிடும் கவியி லெந்தன்
சரித்திரம் புரிவீ ரென்னால்
மாற்றிடு முலகைக் காண
மறுபுறம் போவோம் வாரீர்.

நிறுத்தினே னென்னைப்பற்றி
நிகழ்த்திய உரைகள் போதும்
பொறுத்திட வேண்டும், பாவிற்
பிழைபல விருத்தல் கூடும்
மறுத்திட மாட்டீ ரெந்தன்
மனமறிந் திட்டதாலே
அறுத்தவன் நானே, யானல்..
விதைத்தவர் நீங்க ளுண்பீர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைக் கவிதைகள்

கவிதை யெங்கும் பிறக்குமே
காலநேர மதற்கிலே
கவிதை நன்று வளருமே
காணு முண்மை நிலையிலே;
கவிதை யென்றும் வாழுமே
கருத்திற் புதுமை யிருந்திடிற்
கவிதை, கவிதை, கவிதையே
கவிஞன் காணு மனைத்திலும்.

கவிஞன் வாழும் நாளிலே..,
காணும் உண்மை நிலையினை
குவியும் கற்பனையுடன்
குழைத்து நீட்டும் கவிதைகள்
அமையும் உண்மைக் கவிகளாய்
அவை விடுத்த பிறவெலாம்
கவியும் மேகக் கூட்டமாய்
கலைந்து போகும் நாளிலே...

அமைதியான மாலையும்
அதற்கு ஏற்ப தனிமையும்
அமையும் போது கவிதைகள்
அதுவாய் வந்து பிறக்குமாம்
இவைக ளல்ல உண்மைகாண்
இலக்கியத்தின் கவிதைகள்
குமையும் குப்பைத் தொட்டிகள்
குருட்டுக் கவிக ளிவைகளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவி. தென்ற லணைத்திலும்
அழகுக் கவிதை பிறக்கலாம்
குருவி, குழந்தைப் பேச்சிலும்
குருட்டுக் கவிக ளன்றியே
வருமோ வாழும் கவிதைகள்
வாரா துண்மை, யேழைகள்
தெருவில் வாழும் வாழ்க்கையில்
தெறிக்கும் உண்மைக் கவிதைகள்.

வேலை செய்யும் கூலியில்
விளையும் வியர்வை முத்திலும்
சாலை யோரம் சோற்றுக்கே
தவண்டை யடிக்கும் ஏழையின்
பாழும் வயிற்றுக் குடலிலே
பிறக்கும் புரட்சிக் கருத்திலும்
வாழும் கவிதை பிறக்குமே
வரலா றறிந்த உண்மையே.

முருகுக் கவிதை வேண்டியே
முகிலைக் கயலைப் பாடிடும்
புழுகுக் கவிகள் பண்டைநாட்
புலவரோடு போகவே
பகலில், இரவில், பாதையிற்
பார்க்கும் யாவும் கவிதையின்
உருவில் வந்து நிற்குமேல்
உண்மைக் கவிக ளிவைகளே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றப்பாடு

நீள்விழி மாத ரோடு
நிகழ்த்திடும் கூத்தைப் பார்த்து
சீழ்க் கவிவடிக்கும், சின்னக்
கவிஞனே போது மிந்தப்
பாழ்க் கவிவிட்டு, ஏழை
பாதையிற் பசியால் வாடும்
வாழ்க்கையை மாற்றப் பாடல்
வடித்திடு, வரலா றேற்றும்.

காற்றினை, காவை, ஓடும்
கார்முகில் தன்னைப், பாயும்
ஆற்றினை அழகுப் பெண்ணை
அலைகடல் தன்னை வைத்து
சாற்றிடில் கவிதை தன்னில்
சாறிலை, ஏழை வாழ்வை
மாற்றிடக் கவிதை பாடில்
மல்ருமே புதிய வையம்.

நிலவினை... நீலவானை
நித்திலக் கூட்டந் தன்னை
களவிலே புணரும், காதற்
கன்னியர் தன்னைப் பாடும்
புலவனே நிறுத்தி யேழை
புசித்திடத் துடிக்கும் வாழ்க்கை
நிலையினை மாற்றப் பாடு
நீள் நிலம் நினைக்குமுன்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைகொள் தமிழா ளிங்கு
    கலங்கிரு ளதனுற் துள்ளிப்
பொங்கு நீதமிழா வென்று
    புலம்புதல் விட்டு, ஏழை
தங்கிட வசதி யின்றித்
    தவித்திடும் வாழ்க்கை மாறப்
பொங்கிநீ கவிதை செய்தாற்
    புவிதனி லுன்பேர் வாழும்.

* *

UNIVERSITY OF CEYLON
21 SEP 1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சி ஓங்கும்

பசித்தவன் வயிறு தன்னில்
பாதையி னோரம் வீடாய்
வசிப்பவ னிதயம் தன்னில்
வளருது புரட்சி யின்னும்
நசித்திட நினைப்போர் நாளை
நலிவது திண்ணம், ஏழை
புசித்திட வழிகள் வேண்டும்
புலப்பிடிற் புரட்சி போங்கும்.

மாடியி லொருவன், வீதி
மரத்தடி யொருவன், இந்தக்
கேடொழி வரைக்கும் வையம்
சேண்மை யாய் வாழாதுண்மை
வீடிலே, வயிற்றுக் குண்ண
விளைந்த நெல் வகையுமில்லை
நாடுமே யில்லை யென்றால்
நடப்பது புரட்சி தானே.

விளைத்தவ னறுத்தல் நீதி
வீதியிற் சும்மா வாயால்
அளப்பவன் தலைமை யேற்கும்
அழிநிலை போக்கி யிங்கு
உழைப்பவன் கொடிகள் தூக்கி
உரிமையைக் கேட்டாலங்கு
முளைத்திடும் புரட்சி தன்னில்
முடியுமே சுரண்ட லாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப் பறிவில்லா ஏழை
பாதையிற் தூங்க மற்றோர்
குடிப்பதும் மாடி வீட்டில்
குலவிய பின்னர், வந்து
நடிப்பதும் ஏழைக்காக
நாடக மறிவீர். நாளை
வெடித்திடும் புரட்சி யப்போ
விழுவரே அத்தத் தீயில்

வேதியர் மேலோ ரென்றும்
வேற்றவர் கீழோரென்றும்
சாதிக ளென்னும் சேற்றுக்
சகதியில் உழல் வோரிங்கு
நீதிகள் கேளார், நேற்று
நிகழ்ந்தவை பாரார் இன்னும்
மோதிட நினைப்ப ரேனில்
முடிவதிற் புரட்சி தானே.

ஆரியர் வரமுன் சாதி
ஆயிர மிருந்த தாகப்
பூரியர் சிலபே ரிங்கு
புலம்பியே கையில் மின்னும்
கூரிய வாழ்க ளேந்திக்
குதிப்பரேல் உறுதி யன்னார்
நாரிகள் போடும் நாங்கள்
நடத்திடும் புரட்சி வெல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலின் கதவைப் பூட்டி
கும்பிடப் போகும் பக்த
சிலரை வெளியே தள்ளி
சீ ! இழிசாதி யென்று
வாசலை யடைத் தாலென்ன
வழி யெமக்குண்டு, இன்றே
கோவிலைத் திறக்க வேண்டும்
கேடெனிற் புரட்சி யோங்கும்,

புதிய தோருலகைக் காணப்
புறப்பட்ட தீரர் நாங்கள்
கதியெமக் கொன்று மில்லை
கடைசியில் வழிதா னென்று
அதுதரும் ரத்த வெள்ளம்
ஆயினும் வழி வேறின்றி
இது, தரும் பாதையென்று
எழுந்தனம் புரட்சி செய்ய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் உரிமைகள் யாரிடம்

நாளு முழைத்திடும் மக்கள் — இந்த
நாட்டின் முதுகெலும் பாகும்
ஆளு முரிமைக ளந்தத் — தொழி
லாளரிடம் வரவேண்டும்.

மாடு எனத்தினம் மேனி — எழில்
வாட வுழைத்திடு வோர்கள்
வீடு இலையெனி லிந்த — முத
லாளி யரசெ மக்கேனோ

ஏழை யினியிந்த நாட்டில் — இலை
என்னும் நிலை வரவேண்டில்
காளை வயதின ரெல்லாம் — போர்
காணப் புறப்பட வேண்டும்.

நித்தம் சுரண்டிடு வோர்கள் — கால்
நீட்டித் துயில் கொளும்போது
செத்த பிணங்களைப் போன்று — தொழி
லாளர் உழன்றிடல் நன்றோ.

காடு அழித்திடு வோர்கள் — வயற்
காணி உழுதிடு வோர்கள்
வீடு அமைத்திடு வோர்கள் — தெரு
வீதி கிடப்பது நன்றோ.

உண்ண உணவில்லை நாட்டில் — இதை
ஊழ்வினை யென்றிட லாமோ ?
முன்னரும் ரூசிய நாட்டில் — போர்
மூண்ட கதை யறி வீரோ ?

280588

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை நடத்திடப் போரே

ஏழை யெளியவர் எத்தனையோ துயர்
என்று கலங்கிடும்போது — அவர்
ஏற்ற மடைவ தெப்போது — அது
நாளை யெளி லவர் நாறிடு வாருடன்
நாடிடுவோம் பெரும் போரை — நாம்
ஆளிடுவோம் இந்தப் பாரை

மாடி மனைகளிற் தூங்கிடு வோரிடம்
மண்டி யிடுவது போதும் — அது
மான மிலாதது பாரும் — இனி
வாடி யிருந்திட நேரமில்லை யென
வந்து குவிந்திடு வீரே — இனி
வாழ்க்கை நடத்திடப் போரே

மாலை யணிந்திட மன்றத்திலே சிலர்
மக்கள் தலைவர்களாக — நிறம்
மாறுகிறார் புகழ் சேர பின்னர்
ஆலையதிபதி யாகிடுவா ரிவர்
அத்தனையும் வெறும் வேஷம் — இவர்
ஆற்றிய பேச்சுக்கள் கோஷம்

காந்தி வழியெனும் சாந்தி வழிதனில்
கண்டிடுவோம் சம நீதி — என
கத்திடு வோர்க் கெவர் நாதி — வெறும்
பூந்திரியின் பிரகாசத்திலே மனம்
போட்டு வுடைத்தது போதும் — இனிப்
போரை நடத்திட வாரும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களாட்சி காணவே

உழைக்கும் வர்க்க மெழுந்து நின்று
உரிமை கேட்டுப் போரிடில்
நிலைக்குமா ? அந் நீசராட்சி
நினைத்துப் பாரும் தோழரே.

புரட்சி யென்னும் புதிய கீதம்
பிறந்து விட்ட நாளிலும்
வரட்சியான வர்க்க மொன்று
வாழுகின்ற தேனடா.

நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த
நீடுயிர்க்கும் தோழனே
பற்றுமந்தப் புரட்சித் தீயில்
பாதை யொன்று தெரியுதே.

இன்னு மென்ன தாமதம் .. நீ...
எழுந்து வந்து போரிடில்
இன்னலுக்கும், இழிமைகட்கும்
இறுதியான நாளதே.

போதுமிந்தப் பொம்மை யாட்சி
பொழுது சாயு முன்னரே
மாதரும் எழுந்து வாரீர்
மக்களாட்சி காணவே.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடிவீட்டில் மகிழு மந்த
மனித ரென்ன தெய்வமோ
வாடி யிங்கு வறுமையோடு
வாழும் நாங்கள் நாய்களோ.

கூவுமெங்கள் குரல்கள் செல்வக்
கோட்டை தன்னை யிடிக்குமே
நாளை யெங்கள் கைகளோங்கி
நாடு தன்னை யாளுமே.

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவை நோக்கி....

மயிலே யிறகு போடென்றால்
 மயிலும் இறகு போடுமா ?
விழியே யிரவு தூங்கென்றால்
 விழியும் உடனே தூங்கிடுமா ?
வழியோ யிதற்கு இதுவல்ல
 வாவென் றிழுத்து மயிலதுவின்
பழியென் றெண்ணிப் பாராமல்
 பறிக்க வேண்டும் இறகதனை

அன்பால் நாளை ஆலயத்தின்
 கதவு அகலத் திறக்குமென்று
பண்போ டிருந்தாற் பாதகர்கள்
 பாரார் கதவைத் திறக்கார்கள்
நண்பா ! வேண்டாம் நமக்கிதுவோ !
 நன்மை கொடுக்கும் வழியல்ல
முன்போல் மீண்டும் போராடு
 முடிவைப் பார்ப்போம் பின்னடி.

இறைவன் சாதி யிருக்கென்று
 எப்போ தானும் சொன்னாரா
மறையோன் சொல்லும் மந்திரத்தில்
 மறைவா யுண்டோ சாதிமுறை
பறையன் கோயிலுட் சென்று
 பரம னோடு சேர்ந்தகதை
கறையான் தின்று விடவில்லை
 கண்ணாற் பார்த்து நீயுணர்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்றிக் குணவாய் பாலீந்து
பரமன்செய்த தொழிலெல்லாம்
இன்றும் சொல்லித் திரிவீர்கள்
இழிவாய்க்கதவை யடைப்பீர்கள்
குன்றில் ஆடும் வேலவனின்
குழந்தைத் தனத்தை சொல்வீர்கள்
என்றும் எங்கள் நிலையிதுவோ
எழுந்தாற் பதில்நீர் சொல்வீரோ.

தீண்டாச் சாதி நாமென்றால்
சிவனே யில்லை யிதுவுண்மை
வேண்டாப் பொய்யைச் சொல்லாதீர்
விளையும் தீமை யிதனாலே..
ஆண்டா னடிமை முறையெல்லாம்
அழியும் போது தீண்டாமை
கூண்டோ டழிதல் முறையன்றோ
குதிப்போம் இனிமேற் சமரென்று.

வில்லு ஊன்றிச் சுடலையிலே .
விழுந்த சூட்டால் எங்கள் மனம்
கல்லு ஆகி விட்டதடா
கடவுள் வந்து முன்னாலே
நில்லு என்று சொன்னாலும்
நில்லோம் தள்ளோம் இதுவுண்மை
வெல்லும் எங்கள் போராட்டம்
விடிவை நோக்கி நடக்கின்றோம்.

# தொடங்கவேண்டும்

நாளை காணப் போகு மெங்கள்
ஈழநாட்டு மண்ணிலே ..
ஏழை யென்றும் எளிய ரென்றும்
எவருமில்லை யுண்மையே
வேளை வந்து விட்ட தென்று
விடிவு காணப் போரிடும்
ஏழைமக்கள் நாளை யாட்சி
ஏற்கப் போவதுண்மையே

மாடிவீட்டி லொருவன், வீதி
மரத்தின் கீழே வாழ்க்கையை
தேடி நிற்கு, மொருவ னிந்தத்
தேவையற்ற பேதமை
கூடிநின்று வீதி தன்னில்
குரலெழுப்பிற் போய் விடா(து)
சாடி யோடச் செய்திடில், நற்
சமத்து வத்தைக் காணலாம்

காடு வெட்டி, மேடுதட்டிக்
கழனி செய்யும் கைகளும்
பாடுபட்டு வீடு கட்டிப்
பாதை செய்யும் கைகளும்
வாடுகின்ற போது, மாடி
வாழுகின்ற பேரிடம்
நாடு என்றால் . . . ஏழை வாழ்வு
நரகம் தானே சொல்லுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுது வாழும் உழவனுக்கே
உரிமை யந்த நிலமெனும்
நிலையைக் காணும் வரையிலந்த
நெற்றி சிந்தும் வியர்த்துளி
பழுது காணீ ரினியுமந்தப்
பாதை விட்டு நொடியிலே
தொழுது வாழும் நிலையறுக்கத்
தொடங்க வேண்டும் புரட்சியை

❀ ❀

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடலையிற் காண்பீர்

பட்டணம் பார்த்த போதும்
பாவியேன் சாகமுந்திச்
சட்டென வருவீ ரெந்தன்
சங்கதி புரிவீ ரிந்தக்
கட்டளை யேனோ வென்றூற்
கன்னியென் வயிறு மேளக்
கொட்டுபோல் வளரு தன்பே
குழந்தையா யின்னும் சொல்ல !

வயல் விதைக்கின்ற காலம்
வந்திடு வேன் னென்று
நயக்கதை பேசி யென்னை
நம்பிடவைத்தீர், நானும்
மயங்கிட முத்த மீந்து
மறைவிலே யேதோ செய்தீர்
அடிக்கடி வாந்தி யிப்போ
அறிகிறேன் நடந்தவற்றை

உப்பொடு பச்சை மாங்காய்
உண்ணிட ஆசை, வீட்டுக்
கப்புடன் முதுகைச் சாய்த்துக்
கண்ணுறங் காசை, யெந்தன்
அப்புவின் கதைகள் கேட்க
அச்சமாய் யிருக்கு, தின்னும்
தப்பிட முடியா தன்பே
தாலியும் வேண்டாம் வாரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுகி ஞன் மூன்று மாதம்
மூடிட முடியா தாலே..
அழுதிட லன்றி வேறு
அபலைநா னென்ன செய்வேன்
எழுதிய கடிதம் பத்து
ஏன் பதிலில்லை, யின்னும்
கொழும்பு மாநகரின் வாழ்க்கை
கொண்டது போதும் வாரீர்!

நெற்பயி ரெழுந்து பச்சை
நிறமதாய்க் கருமை பாய்ந்து
முற்றிடும் காலம் வந்து
முடிவுறப் போகு தின்னும்
எத்தனை காலம் நானும்
ஏங்குவ தினிமே லெந்தன்
முற்றிய கரு வயிற்றை
மூடிட முடியா தன்பே!

கிணற்றடிப் பக்கம் போனல்
கிண்டலும் கேலிப் பேச்சும்
எனக்கதைக் கேட்க என்ன
மாதிரி யிருக்கு மென்று
நினைத்துமே பாரும் ஐயோ
நித்திரை யில்லை யின்னும்
சுணங்கவோ வேண்டாம்... இல்லை...
சுடலையிற் காண்பீ ரென்னை..

* *

# யன்னலைப் பூட்டு

முல்லைப் பல் வரிசை காட்டி
முறுவல்செய் தெனது நெஞ்சை
கொல்வதை நிறுத்து, உந்தன்
கூர்முலை காட்டி யென்னை
வெல்வதை நிறுத்து, பெண்ணே!
வினையிது அண்ணன் சொல்லும்
நல்லதைக் கேளாய் சற்று
நகர்ந்திடு அதுவே போதும்.

குத்துவாள் விழியா லென்னைக்
கொல்வதை நிறுத்து, நானோர்
தத்துவக் கவிஞ னன்றித்
தமிழிலே காதல் பாடும்
வித்துவ மறியா, என்னை
விழிகளாற் கொன்று போட்டு
எத்தனை துயர் தந்தாலும்
என்தமிழ் காதல் பாடா.

அம்பிகா பதியின் காதல்
அறிந்தவ னதனு லிந்த
வெம்பிடு முணர்வு யென்னுள்
விளைவதை வெறுத்துத், தூரச்
சென்றிடும் பழக்க முள்ளேன்
துடியிடை யாளே யுன்னைத்
தங்கையென் றெண்ணி யுள்ளேன்
தயவொடு விலகிப் போவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை தெரு, சந்தை, வண்டி
தரிப்பிடம், சினிமாப் பந்தல்
நடைவழி கடலி ஞேரம்
நங்கையே யுனது சின்னக்
கடைவிழி யருளைக் காணக்
காளையர் துடிப்பார், விட்டு
தொடருருய் என்னை யேஞே
துதிக்கிறேன் விலகிப் போவாய்.

என்னறை யிருந்து பாடல்
எழுதிடும் போது யுந்தன்
யன்னலைத் திறந்து நீயோ
தருதுய ரினிமேல் வேண்டாம்
கன்னியே! காத லெந்தன்
கவிதையைக் கொல்லும், இன்றே
புண்ணியம் கிடைக்கும் யன்னல்
பூட்டிஞ லதுவே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவலியே வடக்கே போனால்

குன்றருவி யொன்றி நெடுநதியாய் மாறி
கூடுமுகில் நீர்பொழிய வற்றாதென்றும்
தென்றலினாற் சலசலத்துக் கீதம் பாடி
தெங்கு. றபர் தேயிலையுடன் வளரும் பச்சைக்
கன்றுகட்கு நீரளித்துக் கண்டி நோக்கி
கங்கையெனப் பேர்புனைந்து ஓடிவந்து
நின்று எழில் காட்டி யெமைத் துள்ளவைக்கும்
நீளநதி மாவலியே வணக்கம் சொன்னேன்.

காடுவயல் கவினேரி தாண்டி வந்து
கண்டி நக ரெழிற்கோல மள்ளியுண்டு
ஓடுகின்ற மாவலியே ஒருசொற் கேளாய்
ஓலையொன்று தந்திடுவே னொருகாலத்தே
வாடுமனத்துயர் செப்பி வரைந்த வேட்டை
வடக்கே நீ சென்றிடுங்கா லெடுத்தங்கேகி
நீடு அவர் உயிர் வாழ்ந்தால் நேரே கையில்
நீ கொடுக்க வேண்டு மெனதன்பே ! ஆறே !!

சலசலக்கும் நீரருவி தழுவத் தென்றல்
தளிர்க்கரத்தால் தீண்டவுடல் சிலிர்ப்படைந்து
சிலுசிலுக்க போதை வெறி தலைமீதேறிச்
சிந்திசைக்கும் மாவலியே நினைவுண்டா
கலகலக்கப் புள்ளினங்கள், பரிதிமேற்கில்
கண்ணுறங்கக் கைவளைகள் இழையும் காற்றில்
குலு குலுக்க நான்வருவேன் அவரணைத்து
கொவ்வை யிதழ் சுவைப்பாரேயந்தநாளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற் கதிராய் நிலவு பொழிகின்ற வேளை
பேதை யென்னை யணைத்தணைத்து முத்தமீந்து
கற்பனையாய் கதையளப்பார் களித்து மார்பில்
கண்ணுறங்கிப் போயிடுவேன், காலையாக
நெற்கதிராய் தலைசாய்க்கும் நாணமேனோ
நீயெனக்கு மனையென்பார், நினைவு உண்டா
உற்றவொரு துணையெனக்கு ஆறே நீதான்
உடனேகி உளமதை நீயுரைக்க வேண்டும்.

தங்க வெழிற் சிலையென்று தழுவி முத்தம்
தந்தயிதழ் பிரித்தந்த வார்த்தை சொல்லி
எங்கிருந்து தானிரும்பு நெஞ்சு வந்து
எனை மறந்து போனாரோ? அன்று சொன்ன
சிங்களத்தி நீயதனால்... திருமணத்தாற்
சேரமுடியா தென்ற நஞ்சு வார்த்தை
பொங்குமென துள்ளமதில் வேலாய்ப் பாய்ந்து
பொழுதெல்லாம் சாகின்றேன் போய் நீசொல்லு

கண்டியிலே பட்டமவர் எடுக்கக் கல்வி
கற்றதிரு நாளுனக்கு நினைவு உண்டா?
உண்டு எனில் உரும்பிரா யென்னும் சின்ன
ஊரவரின் ஊரென்றூர் வடக்கே சென்றால்,..
கண்டுவர மறக்காதே, கன்னி யெந்தன்
கனவு வெறும் கனவாகக் காலம் பாய்ந்து
சென்றிடுமோ? ஆறே நீ கெதியிற் சென்று
செப்பிடுவாய் தீராயென் காதல் நோயை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தானே ! ஆருயிரே ! அகல் விளக்கே !
ஆவியெனை விட்டேகிச் செல்லுமுன்னர்
பித்தானே னுன்னழகில் என்ற வாயாற்
பேதையெனை யணைத் தெந்தன் கன்னம் மீது
முத்தமொன்று தந்திடுங்கள் மகிழ்ச்சி யோடு
முடித்திடுவேனென்வாழ்வை, பிறகென்றாலும்
செத்தவளென் நினைவிருந்தால் . அதுவே போதும்
செப்பிடுவா யவரிடத்தில் மறந்திடாதே.

புதுநகையை பூவிரியும் சோலைக்காற்றை
புனலருவி தரும் சுகத்தைப், புலரும் வேளை
மதுவருந்தும் வண்டினத்தின் கீதந் தன்னை
மாங்குயிலின் இசையோடு மழலைப் பேச்சை
இதுவரைக்கும் நான்வெறுத்த தில்லை, யின்றோ
இவையெல்லாம் வேம்பாகி விட்டதன்பே
எதுவரினும் இனியுங்கள் முத்த மின்றி
என்னுயிரே ! அத்தானே ! எதுவும் நஞ்சு.

முத்தாரம் பல்லென்றும் முழுநிலாவை
முகத்துக்கு நிகரென்றும் சொல்லிச் சொல்லிப்
பித்தாக்கி விட்டீர்கள் பிறகே னென்னைப்
பிரிந்தின்று போனீர்கள், புலம்பி நானிங்(கு)
அத்தானே சாகின்றேன் அப்பா கூட
அடிவிசரி அவன் போனு லின்னுென்றென்று
தப்பாகப் பேசுகிறார் சகிக்க மாட்டேன்
தரவேண்டும் பதிலின்றேல் சவம்தான் மிஞ்சும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தி நான்.. நீங்கள் தமிழரென்ருல்..
சேரமுடியா தென்று யார் சொன்ஞர்கள்
எங்களினம் வெறுத்தாலும் என்னைப் போட்டு
என்னதுயர் செய்தாலும் இன்றேயோர்சொல்
வந்திடுவே னுங்களிடம் வாழ்நாள் முற்றும்
வாழ்ந்திடுவே னத்தானே யிந்தப் பேற்றை
தந்திடுங்கள் என்ருறே நீ போய்ச் சொல்லி
தரும்பதிலைக் கொண்டிங்கு விரைந்து வாராய்

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் அளிப்பதற்கே

வெல்ல யிதழ்களை மெல்லப் பிரித்தவள்
வீசும் மொழிக ளெல்லாம் — தமிழ்ச்
சொல்லி லெழுதிய நல்ல கவியெனச்
சுவைக லளித்திடுமே.

மின்னுமொளிக் கதி ரென்ன அவளுடல்
மோக வெறிதருமே — தலைப்
பின்ன லசைந்திடப் பேதை நடந்திடில்
பித்துப் பிடித்திடுமே.

முத்துச் சிரிப்புடன் கொத்துமவள் விழி
கேப மகற்றிடுமே — அவள்
சித்திரத் தேரெனச் சிந்தை கவர்ந்திட
நித்திரை போய் விடுமே.

பொங்கித் திரண்டநல் வெண்ணைத் திரளெனப்
பேதை முலையிரண்டும் — எனைக்
கங்குல் முழுவதும் காச்சி யெடுத்திடும்
கனவி னுரு வெடுத்து

நித்தமவள் நடு உச்சிப் பொழுதினில்
நெல்லு வயலினுக்கு - அவள்
அப்பன் பசிக்குண வாக்கி நடந்திடும்
அழகி லெனை மறப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சிக் கொடியிலும் பிஞ்சுக் கொடியென
வாடு மவளிடையில் — சிறு
கஞ்சிக் கலமணைத் தஞ்சி நடந்திடக்
கண்டு களித்திடுவேன்.

புத்தி பிடிபடப் பூப்படைந்தே யெழில்
பூத்த மலர்க் கொடியாள் — இனும்
எத்தனை நாளளனை யேய்த்திடுவாள், பெரும்
இன்ப மளிப்பதற்கே.

* *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலிக்கு ஓர் கடிதம்

அத்தை யபிராமி யெனக் கென்றே பெற்ற
அழகு மயிலே யுனது கடிதம் கண்டு
பத்தரைக்கே கந்தோரை விட்டு வந்து
பதிற் கடித மெழுதுகிறே னன்பே யெந்தன்
நித்திரையிற் கூட நினைவாக நிற்கும்
நிறைகுடமே ! நான் சுகமே நீயுமங்கு
சித்திரப் பூரண நிலவைப் போன்று பொங்கிச்
சிலகாலம் பொறுத்திருப்பாய் சேர்வோ
மொன்ருய்.

குஞ்சுயாழ்ப் பாணமெனும் வெள்ளவத்தைக்
குடியிருப்பு வீடொன்றின் அறையில் நானும்
அஞ்சு தமிழ் வாலிபரும் வாழ்க்கை யோட்டி
அனுபவிக்கும் நரகமதை யெழுதி லுந்தன்
பிஞ்சுமுகம் வாடிவிடும் போதும் வேலை
புறப்பட்டு வாருங்க ளென்பாயின்னும்
கொஞ்ச நாட்தானே பின்னுன்னைக் கட்டில்
குடியிருப்பை மாற்றிடுவேன் சொர்க்கம்
தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமா னென்றழைக்கின்ற தமிழனிங்கு
''பிள்ளைவிலாஸ்'' என்ற பெயர்ப் பலகைபூட்டி
தருகின்றான் தோசை, யிடியப்பம், பிட்டு
தயிருடனே சோறு பல சுவையாம் பண்டம்
வருமானம் கருதியவன் செய்த போதும்
வளருமெனதுடலினுக்கு, அவனின் சோற்றுப்
பெருங்காயம் பெருவுதவி செய்யு, முந்தன்
பிஞ்சு விரல் பட்ட சோறுண்ணும் மட்டும்.

இன்றிங்கு அம்மாவின் கடிதம் வந்து
இயம்பியதா லுங்குள்ள புதின மெல்லாம்
ஒன்றேனும் தப்பாமல் அறிந்து மிக்க
உவகையுட னெழுதுகிறேன் அடுத்தபோயா
கன்றாக நான்துள்ளி உன்னைக் காண
கட்டாயம் வருகின்றேன் கனவிற் கூட
நின்றாடும் மானே! என் மாமன் பெற்ற
நித்திலமே! அதுவரைக்கும் பொறுத்துக்
கொள்க.

சிற்றாடை தன்னைப் பூந்தென்றல் தூக்க
சிவந்த முகம் தன்னைக் கையாலே பொத்தி
திற்பாயே அந்த சிறு வயதின், இன்ப
நினைவுவரும் போதெல்லாம் கொழும்புதன்னை
முற்றாக விட்டோடி வந்துன் சேலை
முந்தானைக்குள் ளொளித்துக் கொள்ள ஆசை
நெற்கால வயலாக நிறைந்தென் நெஞ்சை
நிரப்புகின்ற மாமயிலே துயரம் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டெனவே நீதுள்ளிப் பள்ளி செல்லும்
சிறுகணத்தில், எனை மறந்து கள்ளிற் துஞ்சும்
கட்டெறும்பு நிலையாகிக் களித்து யன்னல்
கரையினிலே நின்றுனது கதலிக் கால்கள்
பட்டவிடம் பார்த்திருக்கும் அந்த நாளின்
பசுமைநினை வென்னுளத்தில் பாயும்போது
எட்டவிருந் தேங்குகிறேன் அடுத்த போயா
எப்படியும் வந்திடுவேன் ஏய்க்க மாட்டேன்.

★ ★

# தலைச்செருக்கும் தலைகுனிவும்

அமெரிக்கர் விண்கலத்தில்
அம்புலியைப் போயடைந்த
காலத்தே நானுலகில்
களித்திருந்தே னென்பதிலே
எனக் கதிக தலைச்செருக்கு
என்றாலும் வியட்னமில்
வேட்டை விமானங்கள்
வீசிவரும் குண்டுகளால்
எழிலான வியட்னம் மண்
எருக் குவிய லாவதிலே
இந் நாளும் பூமியிலே...
இருந்தே னென் றெண்ணுகையில்
அந்தத் தலைச்செருக்கு
அழிவாகித் தலைகுனிவேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல் மாற்றிக் கூவு

குயிலே ! இனிமேல்நீ, குரல்மாற்றிக் கூவிடுவாய்
எளியோர்கள் வாழும், இல்லிருந்து பாடிடுவாய்
நாளும் பசியாலே.., நலிவுறுமம் மக்களுக்கு
வாழும் வகை சொல்லி, வாயெடுத்துக் கூவிடுவாய்
காலே முதற் தொட்டு, கடுமுச்சி மாலேவரை
வேலே செயும் மக்களது, வேதனேக்காய் பாடிடுவாய்
மாடி மனேகளிலே..., மலர் மஞ்சம் மீதிருந்து
கூடி மகிழ் வெய்தும், கூட்டத்துக்காய்ப் பாடி
நாதமிழந்திருக்கும், நல்ல குயிலே யினிமேல்..
பாதைதனில் வாழும், பஞ்சைகட்காய் பாடிடுவாய்
உச்சி மரக் கிளேயில், உட்காந்து பாடுவதை
குச்சுக் குடில்மேலே, குயிலே! நீ கூவிடுவாய்
பிறக்கும் புதுயுகத்திற், பொன்னெழுத்தா
லுன்நாமம்
இருக்கும் அதைநினேந்து, இப்போதே கூவிடுவாய்
நாளும் உழைக்கின்ற, நல்ல தொழிலாளரது
பாழும் பசிப் பிணியைப், பாட்டாகப் பாடிடுவாய்
கீதக் குயிலே!.. நீ..., கேட்டிருப்பா யேழைகளின்
சோகக் குரலதனே, சோற்றுக்கே துடிக்கின்ற
வாதைத் துயரதனே, விழியாலே பார்த்திருந்தால்
நாதக் குயிலே நீ. . நல்லவர்க்காய்க் கூவிடுவாய்
பாதைதனில் வாழும், பஞ்சைகட்காய் பாடிடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுவழியே நடக்கின்றோம்

நீண்ட, மிக நீண்ட
நெடுவழியே நடக்கின்றோம்
நீண்ட மிக நீண்ட
நெடுவழியே யென்றாலும்
தாண்டிடுவோ மென்றவொரு
சக்தி யெமக் குண்டதினல்
பத்தாண்டு பின்னென்று
பகீரதனுர் சொல்லியபின்
பத்தாண்டு சென்றன காண்
பாதி வழி கடந்தும்... அவ்...

நீண்ட, மிக, நீண்ட
நெடு வழியே நடக்கின்றோம்.
வங்கத்தை நோக்கி
வளர்ந்துள்ள பாதையிலே...
எங்களது காலிரண்டும்
ஏறுநடை போட்டிடவே
நாவல், சிறுகதைகள்
நாடகங்கள் என்று பல
பேர்களுடைய பெரும்
பட்டணங்கள் தாண்டியந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட மிக நீண்ட
நெடுவழியே நடக்கின்ருேம்.
பழுதடைந்து போயிருக்கும்
பாழிருட்டுப் பாதை யந்தத்
தமிழகத்துப் பாதையினைத்
தள்ளிய பின் னவசரமாய்
கேரளத்தை நோக்கி
கிளர்ந்தெழுந்த சிந்தையுடன்
ஆவலினுற் துள்ளிடும் கால்
அவசரமாய் நடந்திடவே
நீண்ட மிக நீண்ட
நெடுவழியே நடக்கின்ருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரம் விளைநிலம் வியட்நாம்

வீரம் விளை நிலமாம்
வியட்நாமில், வாழ்கின்ற
தீரம் நிறைந்தோர்க்குச்
சிரம் தாழ்த்திப் பாடுகின்ற
பாடும் குரல் கேட்டுப்
பாதகராம், அமெரிக்கப்
பேய்களது தலை கொய்தே
பிணமலைகள் செய்திடுவீர்

என்னருமை வியட்நாமில்
இருக்கின்ற வாலிபரே!
அன்னையரே! தந்தையரே!
அறிவறிந்த மங்கையரே!
கண்ணை யிமை காப்பது போல்
தாயகத்தைக் காத்திடவே
முன்னையிலும் வேகரமாய்
முடிவறியப் போரிடுவீர்

அந்நியனே! அமெரிக்க
அழிகுடியில் வந்தவனே
உன்னையு மோர் தாய்தானு
உலகத்தே பெற்றெடுத்தாள்
என்ன பிழை செய்தார்கள்
எங்கள் வியட் நாம்மக்கள்
பின்னெதற்குக் குண்டள்ளிப்
போடுகிருய் பாதகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைக் குழந்தைகளும்
பருவ இள மங்கையரும்
நச்சுப் புகையதினுல்
நாறு பிண மாகிடவே
எச்சிற் சொறி நாயே!
எதைக் கண்டு எங்களது
உச்சவியட்ஞம் மண்ணில்
உன்வெறியைக் காட்டுகிருய்

தலை சாய்த்த நெல்வயல்கள்
சரிந்தொழுகும் நீர்நிலைகள்
நிலையான ஆலைகளும்
நீண்ட றெயில்ப் பாதைகளும்
கொலைகாரா! உந்தனது
குண்டுகளாற் பாழாகிச்
சுடுகாடு போற் தோன்றித்
துடிக்குதடா! வியட்ஞம் மண்ணு

சின்னவரைக் குண்டுகளாற்
சிதறடிக்கும் பாவிகளே!
கன்னியரைக் காமுகத்தால்
கற்பழிக்கும் காலிகளே!
அன்னையரைத், தந்தையரை
அழிக்கு(ம்) வெறிநாயகமே
என்ன! ஜன நாயகமே
இதுதாஞ? இழியவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதையுடன் அவர் வாழும்
வருடங்கள் எத்தனைதான்
போதையினால் உன்னுடலின்
புது மெருகு... அப்பப்பா...
ஏது பிழையவர் செய்தார்
எடுத்தியம்பாய் எளியவனே
போதுமடா! போதுமடா!!
போய்விடடா, பாதகனே!

UNIVERSITY OF CEYLON
21 SE 19
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாய் எமக்குதவினான்

பூட்டிக் கிடந்த தமிழ்ப் பாட்டை யெளியநடை
காட்டி யழகு செய்தவன் — மெரு
கூட்டி வெளியில் விட்டவன் — தினம்
வாட்டும் பசிகிடந்தும் வீட்டை மறந்திருந்தும்
ஏட்டில் எழுதிவைத்தவன் — தன்
நாட்டை நினைவிற் கொண்டவன்.

அடிமை விலங்குதனை யொடியக் கவிதையொரு
நொடியில் எழுத வல்லவன் — இடர்
மடிய உழைத்த நல்லவன் —எளிய
குடிகள் மனதிலறம் படியத்தின மிரவு
விடியும் வரை யெழுதினான் – தேன்
வடியும் அவன் கவிதையால்..

பெண்ணைத் தனது. இரு கண்ணென்றெழுதியிந்த
மண்ணிற் புரட்சி செய்தவன் —நல்ல
பண்ணிற் கவிதை தந்தவன்—அதை
எண்ணி லவன் கவிகள் திண்ணம தரமதிலே
விண்ணில் எழுந்து நிற்குமே – அவை
சொன்னாற் சுவைகள் தருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவாய்க் கிடந்த தமிழ் உருவாய் வெளியில்வர
அருகாய் நின்றுதவினன் — கவிக்
குருவாய் எமக்குதவினன் — அவன்
திருவாய் மலர்ந்த தமிழ் முருகார் கவிதைகளாய்
வருமே யிவைக ளுண்மையே — யார்
தருவார் கவிக ளினியே.

வேளைக் குணவு தின்ன ஏழை தவிக்கி லொரு
நாளி லுலகம் தொலைப்பேன் - கவி
வாளை யெடுத்து அழிப்பேன் - என
நாளை மலரும் சம, வாழ்வை நினைவிற் கொண்டு
ஆழக் கவிதை சொன்னவன் - பலர்
மீள வழிகள் செய்தவன்.

சாதி பலவைச் சொல்லி மோதி யழிதல் கண்டு
காதில் உறைக்கச் சொல்லியே - பலரை
வாதில் உதைத்துத் தள்ளியே - அவன்
நீதி யெடுத்துரைத்து ஆதிமுறை யழித்து
வீதி நின்று பாடினன் - பாரதி
பாதி வயதில் மடிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயவேலி அகற்றிடுவோம்

ஆதிமுறை யென்றும் ஆகமமென்றுமே
ஆலய வாசலில் வேலி – அதை
ஆக்கி வைத்தா னொரு காலி – அந்த
வேதியனோடு உள்வீதி யிருந்துமே
வேதனை தந்தவன் பாவி – அவன்
வெந்து மடியணும் சாமி.

தீண்டக் கூடாதவன் சேர்த்த பனங்களை
தித்திக்க வாயினுள் ஊற்றி – அவன்
சேர்த்த பனங்களைப் போற்றி – பின்னர்
தாண்டக் கூடாதவன் ஆலய வாசலைத்
தாண்டுவதோ பெரும் பாவம் – எனச்
சாற்றுவதே சிலர் வாதம்.

நந்த னெனும் பறைச் சாதி மகன் கதை
நல்ல கதை யெனச் சொல்வார் – அதை
நாளும் பிரசங்கம் செய்வார் – பின்னர்
சொந்தச் சகோதரர் கோயில் புகுந்திடில்
செத்தது ஆகம மென்பார் – பல
சோலி சுரட்டுக்கள் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சத்தே நிறைந்த அண்ணா

இந்தி வெறி நாயகத்தார் தமிழைக் கொன்று
இனிது அரசாண்டிடவே நினைத்த போது
அந்தரமாய் காஞ்சியிலெம் அண்ணா தோன்றி
அணிதிரட்டித் தமிழகத்தார் நெஞ்சம் தன்னில்
சிந்தனையைத் தூண்டியதாற் திரண்ட வீரர்
சீறிவரும் பகைமுடிக்கச் சித்தம் கொண்டு
சந்தியிலும் சட்டசபை வெளியுள்ளேயும்
சமர் புரிந்தார் அண்ணாதான் தலைமையேற்றார்

ஆண்டவனை மக்கள் சென்றடைவதற்கு
அந்தணரின் இடைத்தரகு வேலையிங்கு
வேண்டியதே இல்லையென முழக்கமிட்டார்
வேடமிடும் ஆத்தியர்கள் வெகுண்டார்..ஆனால்
பாண்டியனின் வழித்தோன்றல் அண்ணாயிந்தப்
பசப்பலுக்கா பணிந்திடுவார். துணிந்து நின்று
தாண்டி வந்தார் பலதடைகள், தமிழைக்காத்து
தலைநிமிரச் செய்தார்தன் தாயின் நாட்டை

ஓரிடத்தில் பணமெல்லாம் ஒதுங்கிக் கொள்ளல்
ஒருபோதும் கூடாது. பொதுமை கண்டு
யாரிடத்தும் ஓரளவே யிருத்தல் வேண்டும்
யானிதனைத் தான்செய்வேன் என்று சொல்லி
காரியத்தில் காட்டியவர் அண்ணா வென்று
கடும்மதிரி கூடப் பாராட்டிச் சொல்லும்
பேரியக்கம் அண்ணாவின் புகழைச் சொல்லப்
பொதிகை மலைத் தமிழினிலே வார்த்தையேது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதைகள், கட்டுரைகள், சிறந்த நாவல்
சினிமாவின் வசனங்கள், கவிதையென்று
நறுஞ் சுவையாய்த் தந்ததுடன், மேடை தன்னில்
நடிகருமாய் நின்றவரெம் அண்ணு, பின்னர்
திரும்பு மிடம் மக்கள் எதிர் பார்த்து நிற்கும்
சிறந்த முதலமைச்சருமாய் திகழ்ந்து விட்டு
வரும் புகழைத் தாங்குதற்கு வலிமை யின்றி.
வாடியெமை ஆழவிட்டுப் போய்விட்டாரே.

தால முத்து நடராசன் தமிழைக் காக்கத்
தன்னுயிரை நீத்ததுவும் அண்ணு கேட்டு
வேழ மதாய் வேற்று படை வெல்லச் சென்று
வெம்சிறையில் வாடியதும், நினைவை விட்டு
கால மதாற் சென்றிடுமோ? கனக மேனி
காண்பதினி யெங்கோதான் அண்ணு! அண்ணு!!
ஓல மிடுகின்றேமே உணர்ச்சியற்று;
உறங்குதியோ, என்செய்வோம் ஐயோ!
ஐயோ!!

பெருவோசைக் கடற்கரையின் மண்ணேடொன்றிப்
போனுலும் அண்ணுவின் பேர் போகாது
வருடங்கள் பத்தல்ல.... பல நூறல்ல...
வளமாரெம் திராவிடர்கள் வாழும் மட்டும்
தெருவெங்கும், சபையெங்கும், தமிழைக்காக்க
திரட்டுகின்ற படையெங்கும் அண்ணு தோற்றம்
உருவாகி முன்னின்று தலைமையேற்கும்
உணர்ச்சி மிகு படையவரின் பின்ஞற் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரோடும் சென்னை நகர் வீதியெல்லாம்
கண்ணீரால் ஆறாகிப் போனதாமே
ஈரோடு பெரியாரே கண்ணீர் சிந்தி
இனியென்ன செய்வேனென் றழுதாராமே
வேரோடு மரம் சாய்த்த விதியே! எங்கள்
வேதனையை யாரிடத்திற் சொல்லப்போமோ
நீரோடும் கண்கள் தான் தஞ்சமானோம்
நெஞ்சத்தே அண்ணாதான் நிறையலானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுடம் வென்றதம்மா

வான வெளிதனில் வந்து ஒளிரிடும்
வண்ண நிலவினுக்கு
மோனத்திரை கிழித் தேறி விரைந்தது
மின்னும் ஒளிப்பிளம்பு
கானக் கிடைக்கிலே கேப்கென டிமுனே
கண்களழுகு தம்மா
மானப் பிறவிகள் மதியிலிறங்கினர்
மானுடம் வென்றதம்மா.

நீலத்திரைவிரி மேகம் கிழித்துமே
நீண்டு விரைந்தனரே
பாலைப்பொழி நிலவேறித் தமதிரு
பாதம் பதித்தனரே
நாளை வருபவர் மூளை பயணிலே
முற்றும் முடிந்ததினுல்
காலப் புதுமையிற் சாலச் சிறந்ததைக்
கண்டு கணித்தனமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரை மீதினி லெத்தனையோ யினி
நித்தம் நடந்திடலாம்
செத்தவரை உயிர்ப் பித்திடலாம், புகழ்
முத்திரை குத்திடலாம்
அத்தனையும் வெறும் செத்தவையே, இந்த
அப்பலோ சாதனை முன்
முத்து நிலாவினில் இத்தரை மாந்தரின்
மூச்சுப் படிந்ததுவே.

தில்லை நடமிடும் தேசிகனின் சடை
தன்னி லிருக்கு தென்றார்
முல்லை முறுவலை சிந்திடும் பெண்களின்
முகத்தினை யொக்கு மென்றார்
எல்லை கடந்ததோர் வானிடையே யது
ஏங்கித் தவிக்கு தென்றார்
இல்லை யிவை யெலாம் இல்லையென்றுகிட
ஏறியமர்ந்தனரே.



UNIVERSITY OF CEYLON
21 SEP 197
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive 1
Negative 11063
Reel No.
Date; 4/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MICROFILMED
Positive
Negative 1
Reel No. 11063
Date 4/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
21 SEP 19
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலாசிரியர் இரத்தினதுரையின் கவிதை யொன்றை முதன் முதலாகத் ''தேசாபிமானி'' பத்திரிகையில் படித்தேன். அதன்பிறகு அவரது கவிதைகளில் என்னையறியாமலே ஒரு நாட்டம். அந்த ஆவலினுல்த்தான் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பை நானுகவே ஏற்படுத்திக்கொண் டேன்.



புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட யிவர் 1948-ம் ஆண்டு வரதலிங்கம் - பாக் கியம் தம்பதிகளுக்கு இரண் டாவது மகனுகப் பிறந்தார். சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்வி பயிலும் போதே கவி தைகள் எழுதத் தொடங்கிய இவர், சதா ஏதேனும் சிந்தி த்தபடியே யிருப்பார். ஆரம் பத்தில் காதல் கவிதைகளில் தன் கைவண்ணத்தை காட் டியயிவர் இப்போது தான்சார்ந்த இயக்கத்தின் கோட்பாடுகளுக்கமைய தனது கவிதைகளை மாற் றிக் கொண்டுவிட்டார்

''கமலக்கன்னி'', ''வரதபாக்கியான்'', ''இள வரதன்'' என்று பல புனைபெயர்களுக்குள் புகுந்து கொண்டு கவிதைகள் எழுதிவருகிருர். அவரது கலகலப்பான பேச்சே அவரிருக்கும் இடத்தை எவருக்கும் காட்டிக்கொடுத்துவிடும்.

யாழ்ப்பாணம் ... கநாதன் -

280588
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org